தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 23 ஜூன் 2023 கனி 7



ஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
ரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்




MONTHLY
THE WORD OF CHRIST

# வேதபாடம்

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு
நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச்
சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39




பாடம் : 42
தலைப்பு : மாறுபாடுள்ளவன் – Froward
வேத வாசிப்பு : நீதிமொழிகள் 3:32



1. மாறுபாடானவன் சண்டையை கிளப்பிவிடுகிறான் - நீதி.16:28
2. மாறுபாடானவனுக்கு நீர் மாறுபடுகிறவராயிருக்கிறீர் -2சாமு.22:27
3. மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி - அப்.2:40




மாத இதழுக்கான
சந்தா செலுத்த இரு வழிகள்

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



JOIN OUR
WORLD EVANGELISM
BIBLE SCHOOL
RIGHT NOW



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

Contact Us: 94435 58041


## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்

## Our TV Program: All Days of the Week

*Every Sunday,Thursday & Saturday 6.00 P.M on Heaven TV*

*Every Monday & Wednesday 6.00 P.M on Joy TV*

*Every Tuesday & Friday 6.00 P.M on Channel 316 TV*

*Every Saturday 8.30 P.M on Nithyam TV*

YouTube : the word of christ





**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை.
செய்திகள்: ஜெ.சி.சோட். பெட்டி சோட்.
மற்றும்
வேதபாடம். வாலிபர் பகுதி. பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி. வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 23 ஜுன் – 2023 கனி – 7


ஆசிரியருரை

## கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்

For to Me to Live Is Christ, and to Die Is Gain



அப்போஸ்தலனாகிய பவுல் இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறான்; "கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்" என்று (பிலி.1:21). ஒருவனுக்கு கிறிஸ்து எப்படி ஜீவனாயிருக்கமுடியும் என்று நீங்கள் நினைக்கலாம். இதற்கான விடையை பவுல் அதற்கு மேலுள்ள வசனத்தில் குறிப்பிட்டுள்ளார். "நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப்போகாமல், எப்பொழுதும்போல இப்பொழுதும், மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும்" (பிலி. 1:20). தேவனுடைய மனுஷன் உயிரோடிருக்கும்போது அவன் மூலமாக கிறிஸ்துவானவர் மகிமைப்படுகிறார். அவன் சாட்சியுள்ள மனிதனாக வாழும்போதும், சரீரத்திலே அங்கும் இங்கும் சென்று தேவனுடைய சுவிசேஷவசனத்தை பிரசங்கிக்கும்போதும், கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் மற்றவர்களுக்கு நன்மைசெய்யும்போதும், அவர்கள் மூலமாக கிறிஸ்துவானவர் மகிமைப்படுகிறார். ஒருவன் கிறிஸ்தவனாயிருந்தும் கிரியை செய்யாதவனாயிருந்தால் அவன் மரித்த சரீரத்திற்கு ஒப்பாக இருப்பான். "சர்தை சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்; தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்" என்கிறார் (வெளி.3:1). இன்றைக்கு இப்படிப்பட்ட சபைகளைப் பார்க்கிறோம். முதல் நூற்றாண்டிலும் இப்படிப்பட்ட சபைகள் இருந்திருக்கிறது. நீ கிரியை செய்யாத ஒரு கிறிஸ்தவனாக வாழ்ந்துகொண்டிருப்பாயானால் நீயும் சர்தை சபையைப்போல இருப்பாய். ஆகையால் உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிராமல் மனந்திரும்பி தேவனுடைய சித்தம் செய்ய உன்னை ஒப்புக்கொடு.

பவுல்; "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப் பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" என்கிறான் (கலா.2:20). பவுல் கிறிஸ்துவோடுகூட சிலுயையிலறையப்பட்டவனாக இருந்தபோதும்

விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறதாகவும் சொல்லுகிறார். ஆம், ஒவ்வொருவரும் பாவத்திற்குச் செத்து நீதிக்கு பிழைத்தவர்களாயிருக்கிறோம். ஞானஸ்நானத்திலே அவரோடுகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும் இருக்கிறோம். ஆக, இவ்விதமாக அவரோடுகூட மரித்த நாம் அவரோடுகூட பிழைத்தும் இருக்கிறோம். ஆகையால் பிழைத்திருக்கிற ஒவ்வொருவரும் அவருக்காக பிழைத்திருக்கிறோம். அநேகர் நான் பிழைத்திருக்கிறதோ என்னுடைய பிள்ளைக்காக பிழைத்திருக்கிறேன் அல்லது என்னுடைய பேரப்பிள்ளைகளுக்காக பிழைத்திருக்கிறேன் என்று சொல்லுவதை கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒரு பிள்ளையோ அல்லது பேரப்பிள்ளையோ நம்மை பாவத்திலிருந்து மீட்கவில்லை என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். எந்த ஒரு மனிதனும் ஒருமனிதனுடைய பாவத்தை மன்னிக்கவோ அல்லது அந்த பாவத்திலிருந்து அந்த மனிதனை மீட்கவோ முடியாது. நாம் இன்று பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு ஜீவனுள்ளவர்களாயிருக்கிறோம் என்றால் அதற்கு மூலகாரணமாக இருப்பவர் இயேசு. இதை அறிந்த பவுல் நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன் என்கிறார். நீங்களும் நானும் இன்று யாருக்காக வாழ்ந்துகொண்டிருக்கிறோம்?

இவ்வுலகத்தின் உறவு உலகத்தில் இருக்கும்வரை இருக்கும். நாம் உலகத்தார் அல்ல என்பதை நீங்கள் நினைவு கூரவேண்டும். அவர் உலகத்தார் அல்லாததுபோல நாமும் உலகத்தார் அல்ல. நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் தேவனோடு இருக்கிறது. ஆகையால் எப்பொழுதும் கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படும்படியாக வாழுங்கள். "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்கிறான் (2கொரி.2:14). ஆசிய முழுமைக்கும் அப்போஸ்தலனாகிய பவுலை தேவன் எடுத்து பயன்படுத்தினார். பவுல் சென்ற எல்லா இடங்களிலும் கர்த்தருடைய சபை ஆரம்பிக்கப்பட்டது. அநேகர் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டனர். இயேசுவின் வாசனையை வெளிப்படுத்துகிறவர்களாக இருந்தனர். அநேகர் தேவதூதர்கள் மனுஷரூபம் கொண்டு வந்திருக்கின்றனர் என்று சொல்லி பவுலை மெர்குரி என்றும் பர்னபாவை யூப்பித்தர் என்றும் சொன்னார்கள். அந்த அளவு தேவன் அவர்களை வல்லமையாக எடுத்துப்பயன்படுத்தினார். ஆகையால் பவுல் சொல்லும்போது எப்பொழுதும் எங்களை வெற்றிச்சிறக்கப்பண்ணினார் என்கிறான். கிறிஸ்து எனக்கு ஜீவன் என்று சொல்லுகிறானேஎன்றால் உண்மையிலே அவனுக்கு ஆண்டவர் ஜீவனாகவே இருந்தார். இன்று ஒவ்வொரு கிறிஸ்தவ சகோதரனும் சகோதரியும் இப்படிப்பட்டவர்களாகவே வாழவேண்டும் என்று வேதம் எதிர்பார்க்கிறது. உயிரோடிருந்து செத்தவர்களாக வாழ்ந்துகொண்டிருப்பதை தேவன் விரும்பவில்லை. கிறிஸ்துவின் வாசனையை வெளிப்படுத்துகிற கிறிஸ்தவர்களாக எங்கிருந்தாலும் வாழவேண்டியவர்களாயிருக்கிறோம். சூழ்நிலைகளைக் காரணமாகச் சொல்லக்கூடாது. தேவன் நமக்கு நாட்களை கூட்டிவழங்கிக் கொண்டிருக்கிறார். நாம் செய்யவேண்டிபணிகள் அதிகமாக இருக்கிறது.

ஆகையால் கிறிஸ்துவுக்காக எப்பொழுதும் ஜீவனுள்ளவர்களாக நடந்து கொள்ளுங்கள்.

இரண்டாவது சாவு எனக்கு ஆதாயம் என்று சொல்லுகிறானே அது எப்படியாகும்? என்ற கேள்வி அநேகருக்கு எழும்புகிறது. ஒரு மனிதனுடைய சாவு ஆதாயமாக இருக்குமா? நிச்சயமாக கிறிஸ்துவுக்குள்ளாக ஒரு மனிதன் வாழ்ந்து சாகும்போது அது அவனுடைய வாழ்க்கையில் ஆதாயமாகவே இருக்கிறது. நாம் வாசித்தபடி "நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப்போகாமல், எப்பொழுதும்போல இப்பொழுதும், மிகுந்த தைரியத்தோடே, ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய் அப்படி முடியும்" என்றான் அல்லவா? அந்தப்படியாக இந்தவசனத்தின் பிற்பகுதியில் சாவினாலாகிலும் கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று சொல்லியிருக்கிறான். இன்றைக்கு இந்த வசனத்தைப் படிக்கிறோம் என்றால் அது அப்போஸ்தலனாகிய பவுல் முதல் நூற்றாண்டு காலத்தில் செய்த ஊழியம். அவர் மரித்தும் அவருடைய வசனங்கள் நம்மை கிறிஸ்துவுக்கு நேரே வழிநடத்துகிறது. பல கல்லறைகளைப் பார்க்கிறோம். ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் என்ற வசனத்தை எழுதிவைத்திருப்பார்கள். அந்த நபர் தன்னுடைய விசுவாசத்தை காத்துக்கொண்டதையும் அவர் ஒரு கிறிஸ்தவராக இருந்து மரணம்வரை சத்தியத்திற்காக நிலைத்திருந்திருப்தையும் அந்த வசனம் நமக்கு நினைப்பூட்டுகிறது. அவர் மரித்தாலும் கிறிஸ்துவின் நாமம் அவருடைய கல்லறையின் மூலமாக அங்கே மகிப்படுகிறதை நாம் அறிகிறோம்.

அதைப்போல யோப்பா பட்டணத்தில் வாழ்ந்த தொற்களைக்குறித்து நாம் அப்.9:36-39 முடிய உள்ள வசனங்களில் வாசிக்கிறோம். "யோப்பா பட்டணத்தில் கிரேக்குப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டுவந்தாள். அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். அவளைக் குளிப்பாட்டி, மேல்வீட்டிலே கிடத்திவைத்தார்கள். யோப்பா பட்டணம் லித்தா ஊருக்குச் சமீபமானபடியினாலே, பேதுரு அவ்விடத்தில் இருக்கிறானென்று சீஷர்கள் கேள்விப்பட்டு, தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டுமென்று சொல்லும்படி இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள். பேதுரு எழுந்து, அவர்களுடனே கூடப்போனான். அவன் போய்ச் சேர்ந்தபொழுது, அவர்கள் அவனை மேல்வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அப்பொழுது விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து அவனைச் சூழ்ந்துநின்றார்கள்". தொற்காள் மரித்தபோதும் அவள் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்த வாழ்க்கை அந்தப்பட்டணத்திலே உள்ள விதவைகள் மூலமாக வெளிப்படுவதைக் காண்கிறோம். அவளுடைய சரீரத்தின் மூலமாக கிறிஸ்துவின் நாமம் மகிமைப்பட்டது.

கிறிஸ்தவனுக்கு சாவு ஆதாயமாக இருக்கிறது. ஏனெனில் அவன் மீண்டும் உயிரோடு எழுப்பப்படுவான். அவனை கர்த்தர் எழுப்ப வல்லவராயிருக்கிறார். "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள்

எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1கொரி.15:22). நாம் ஒவ்வொருவரும் ஆதாமுக்குள் மரிக்கிறோம். ஆதாம் மூலமாக பாவம் செய்யாதவர்களையும் பாவம் ஆண்டுகொண்டது என்பதை அறிவீர்கள். ஆகையால் எல்லோரும் பாவத்தின் கீழ் அடிமைகளானோம். இப்பொழுதோ, கிறிஸ்துவுக்குள் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுகிறார்கள். "பின்பு பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று" (வெளி.14:13). சாவு எனக்கு ஆதாயம் என்று பவுல் சொல்லுகிறானே என்றால்; கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில்; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுகிறார்கள் என்று அர்த்தம்.


இச்செய்தியை வாசிக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே, வாசகரே, கிறிஸ்துவானவர் உன்னுடைய வாழ்க்கையில் உனக்கு ஜீவனாக இருக்கிறாரா? சாவுக்காக பயந்துகொண்டிருக்கும் உலகத்தில் சாவு உனக்கு எப்படிப்பட்டதாக யிருக்கிறது? நீங்கள் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களா? அல்லது உலகத்தானைப்போல வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களா? உலகம், உலகம் என்று உலகத்தை நேசித்து வாழ்ந்தவர்கள் இன்று உலகத்தில் இல்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள். வானமும் பூமியும் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டுள்ளது. இதை அறிந்த ஒரு கிறிஸ்தவன் தன்னை பாவத்தின்பிடியிலிருந்து மீட்டுடெடுத்த ஆண்டவருக்காகவும், அவருடைய சபைக்காகவும் வாழவேண்டும். இன்றே அப்போஸ்தலனாகிய பவுலைப்போல அவருக்காக வாழுங்கள் அப்பொழுது கிறிஸ்து உங்கள் மூலமாக மகிமைப்படுவார்.

**கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் இருந்தால் என்ன நடக்கும்?**

பவுல் சொல்லுகிறார்; "கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோம.8:10,11). சாவுக்கேதுவான நம்முடைய சரீரங்கள் உயிர்ப்பிக்கப்படும் எனக் காண்கிறோம். ஆக, நம்முடைய சரீரம் சாவுக்கேதுவான சரீரம் இந்த சாவுக்கேதுவான சரீரத்தை தேவன் உயிர்ப்பிக்கவல்லவராயிருக்கிறார். எந்த ஒரு மனிதனும் செய்யக்கூடாத காரியத்தை கர்த்தர் செய்வார். உலகத்தில் உள்ள அனைவருமே மரித்தவுடன் ஒரு சிலநாட்கள் வைத்திருந்து அடக்கம்செய்திடுவார்கள். ஆனால் இங்கே கர்த்தருடைய வல்லமையானது சாவுக்கேதுவான இந்த சரீரத்தை எத்தனை நாட்களானாலும் அவர் உயிர்ப்பிக் வல்லவர் எனக் காண்கிறோம். இப்படி உயிர்ப்பிக்க வல்லவருக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். கிறிஸ்துவை உங்களுடைய ஜீவனாகவும் சாவை உங்களுடைய ஆதாயமாகவும் எண்ணுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# இன்று ஏன் ஒரே ஞானஸ்நானம் உண்டு?

WHY THERE IS BUT ONE BAPTISM TODAY? *-J.C.Choate*



**-சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

பவுல் 1 கொரி.10:1-4ல் "இப்படியிருக்க, சகோதரரே நீங்கள் எவைகளை அறிய வேண்டுமென்றிருக்கிறேனென்றால், நம்முடைய பிதாக்களெல்லாம் மேகத்துக்கு கீழாயிருந்தார்கள் எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள் எல்லோரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில் அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்த கன்மலை கிறிஸ்துவே" என்று எழுதினான். அந்நாட்களில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வது தேவையானதாகக் கருதபடாமலிருந்த போதிலும்கூட சமுத்திரத்தின் வழியே நடந்துவந்த இஸ்ரவேல் ஜனங்களைத் திரும்பிப்பார்த்து, அவர்கள் மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்களென விவரித்தான், வேறுவிதமாக கூறுவோமானால், அவர்கள் மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் அடக்கம் பண்ணப்பட்டார்கள் அல்லது மூழ்கடிக்கப்பட்டார்கள்.

செபெதேயுவின் குமாரருடைய தாய் கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தில் தம்முடைய குமாரராகிய இரண்டு பேரில் ஒருவன் அவருடைய வலது பாரிசத்தில், ஒருவன் இடது பாரிசத்தில் உட்கார கிறிஸ்து அனுமதிக்க வேண்டுமென விண்ணப்பித்த போது, "இயேசு பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை, நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார். அதற்கு அவர்கள் கூடும் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி: என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும் என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்கார்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல் மற்றொருவருக்கும் அதை அருளுவது என்காரியமல்ல என்றார்" என நாம் வாசிக்கிறோம் (மத். 20:22,23). மீண்டும் கிறிஸ்து ஆகிலும் நான் மூழ்கவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு,....(லூக் 12:50) என்றார். ஞானஸ்நானமானது பாடுகளினால் அவர் நெருக்கப்படுகிறேன் என சிலுவையின் மேல் தம்முடைய பாடுகளைக் குறித்து இங்கே கிறிஸ்து பேசுகிறார். உண்மையாகவே அவர் ஒரே ஒருமுறை இந்தப்பாடுகளின் வழியே சென்றார்.

கடைசியாக, வேதவாக்கியங்கள் விசுவாசிகளின் ஞானஸ்நானத்தைக் குறித்து பேசுகிறது. இந்த ஞானஸ்நானமானது தண்ணீரில் பெறுவதாகும் (அப்.8:26-39) அடக்கம் மற்றம் (கொலோ.2:12; ரோமர் 6:3,4), பாவமன்னிப்புக்கென்று பெறுவதாகும் (அப்.22:16), இரட்சிக்கப்படும்படி பெறுவதாகும் (1 பேது 3:21), மேலும் ஒருவன் சபைக்குள் சேர்க்கப்பட பெறுவதாகும் (1 கொரி. 12:13). இது கிறிஸ்துவின் நாமத்தில் (அப்.2:38) அதாவது பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் (மத்.28:19,20) நடைபெற வேண்டியதாயிருந்தது. கிறிஸ்து நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:15, 16) என்றார்.

எபேசியர் 4:4-6க்குத் திரும்புகையில் பவுல் ஒரே ஞானஸ்நானம் மட்டுமே உள்ளது என குறிப்பிட்டதை நினைவுகூருங்கள். இந்தக் கூற்றை அவன் கூறின அந்த சமயம் கிட்டத்தட்ட கி.பி.64 ஆக இருந்தது. ஆனால் வேதவாக்கியங்களில் நாம் வாசிக்கின்ற எல்லா ஞானஸ்நானத்திலும் எது ஒரே ஞானஸ்நானமாயிருக்கும்? எந்த சமயத்திலும் ஒரு ஞானஸ்நானமானது தண்ணீரில்லாத ஞானஸ்நானம் அல்லது விசுவாசிகளின் ஞானஸ்நானம், இது எப்போதும் குறிப்பிடப்பட்டுள்ளது என உற்று கவனிப்பதற்கு என்று ஒரு சிறந்த விதியாயிருக்கும். வேறு வகையில், வேதவாக்கியங்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் மற்றும் அக்கினி ஞானஸ்நானம் யோவானுடைய ஞானஸ்நானம், பாடுகளின் ஞானஸ்நானம் மேலும் மேகங்களில் மற்றும் சமுத்திரத்தில் ஞானஸ்நானம் போன்றவற்றைப் பற்றி பேசுகின்றன. ஆனபடியினால் நாம் எபேசி. 4:4-6ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரே ஞானஸ்நானத்தைப்பற்றி வாசிக்கையில் நாம் இது விசுவாசிகளின் ஞானஸ்நானத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது என முடிவுக்குவர வேண்டும்.

நிச்சயமாகவே இன்று பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் நம்முடைய நாட்களிலுள்ள ஜனங்களுக்கென்று கொடுக்கப்பட்டுள்ளதென ஜனங்கள் பேசுகின்றதை நாம் கேள்விப்படுகிறோம், ஆனால் அந்த ஞானஸ்நானமானது கிறிஸ்துவினால் அப்போஸ்தலருக்கென்று வாக்குப்பண்ணப்பட்டிருந்தது, மேலும் அவர் ஒருவரே அதைக் கொடுக்கிறவராயிருந்தார். அந்த ஞானஸ்நானம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டபடியினால், இன்று ஒருவரும் அந்த ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்க முடியாது, தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பற்றி போதிக்கிற மற்றவர்கள், இரட்சிக்கப்பட்ட விசுவாசி, தான் இரட்சிக்கப்பட்டவரா யிருக்கிறாரென காண்பிக்கும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளலாம் என உரிமைபாராட்டுகிறவர்கள் உண்டு, அவர்கள் சரியாக இருந்தால் கிறிஸ்துவுக்கு வெளியேயும் அவரது சபைக்கு வெளியேயும் இரட்சிக்கப்பட்டவராயிருக்கிற ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபைக்குள்ளும் பிரவேசிப்பதற்கு கண்டிப்பாக

ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டுமென தேவனுடைய வார்த்தை சொல்லுகிறபடியினால் ஞானஸ்நானம் பெறவேண்டும் என அர்த்தமாகிறது (கலா. 3:26,27; 1கொரி.12:13). இவ்விஷயத்தில் இப்பேர்பட்ட ஜனங்கள் தவறுகின்றனர் என்பதை நாம் அறிவோம். ஒருவன் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து தண்ணீரில் அடக்கம் என்ற அந்த பகுதியில் இணையாத வரை அவன் இரட்சிக்கப்பட்டவனாயிருக்க முடியாது.

ஞானஸ்நானப்படுத்துவதற்காக தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்பது தேவனுடைய வார்த்தையின் போதனைக்குத் தூரமானது. ஞானஸ்நானம் பெறும்படிக்கு தலையில் தண்ணீரை தெளிப்பது மற்றும் ஊற்றுதல் பற்றிய எந்த வழியும் சொல்லப்படவில்லை. ஞானஸ்நானமானது ஒரு அடக்கமாகும், ஒரு முழுகுதல் ஆகும். தெளித்தல் என்பது தெளித்தலே, ஊற்றுதல் என்பது ஊற்றுதலே, ஆது ஞானஸ்நானமாகாது. இந்தவிதமான பழக்கங்கள் மனிதனால் உருவாக்கப்பட்டவை. இப்போது கேள்வி இதுவே: நீங்கள் வேதாகமத்தினுடைய ஒரே ஞானஸ்நானத்தை ஏற்றுக் கொண்டுள்ளீர்களா? அப்படியில்லையென்றால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். நீங்கள் புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர் நடபடிகள் முழுவதும் வாசிப்பீர்களென்றால் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த அனைவரும் சுவிசேஷத்தை அல்லது கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேள்விப்பட்டு தேவனிடத்திலும், கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசம் கொண்டு தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும் பொருட்டு ஞானஸ்நானம் பெற்றார்கள் அல்லது தண்ணீரில் மூழ்கினார்கள் என நீங்கள் கண்டுகொள்ளலாம். அதன்பின் கர்த்தர் அவர்களை இரட்சித்து தம்முடைய சபையில் அவர்களை சேர்த்துக்கொண்டார் (அப். 2:38, 41, 47). அவர்கள் செய்தபடி நீங்கள் செய்வீர்களென்றால் கர்த்தர் உங்களையும் இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார்.

நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருப்பீர்களானால் அல்லது நீங்கள் பெற்றிருப்பதாக நினைப்பீர்களானால் அது தெளிப்பாக அல்லது ஊற்றுதலாக அல்லது அது சரியான நோக்கத்திற்காக இல்லாமலிருக்குமானால் நீங்கள் ஆவிக்குரிய பிரகாரமாக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவில்லை, நீங்கள் ஏற்கனவே விளக்கமளிக்கப்பட்டுள்ளபடி ஞானஸ்நானம் பெற வேண்டும். ஒரே ஒரு ஞானஸ்நானம் மட்டுமே உள்ளது, மேலும் நீங்கள் கர்த்தருடைய உபதேசத்தின்படி இல்லாவிட்டால் நீங்கள் ஒருபோதும் ஞானஸ்நானம் பெற்றவர்களாயிருக்கமாட்டீர்கள். வேதவாக்கியங்களின்படி நீங்கள் ஞானஸ்நானம் பெறும்போது மட்டுமே நீங்கள் வேதாகமத்தின் ஒரே ஒரு ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கிறீர்களென உங்களால் கூறமுடியும்

ஞாஸ்நானம் என்பது ஒரு சடங்கு அல்ல
அது இரட்சிபிற்கான தேவனுடைய திட்டம்

# கிறிஸ்துவின் சபை

Church of Christ

## I இதன் தொடக்கம்

1. இயேசுவினால் கட்டப்பட்டது - மத்.16:15

2. எருசலேமில் துவங்கப்பட்டது - லூக்.24:47

3. இதன் ஒரே தலைவர் கிறிஸ்து - எபே.5:23

## II இதன் நாமம்

1. கிறிஸ்துவின் சபை - ரோம.16:16

2. அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை - அப்.4:12

## III இதன் ஆராதனை

1. பாடல் (வாத்திய கருவியோ அல்லது கைதட்டலோ இல்லாமல்) - எபே.5:19

2. ஜெபம் - 1தீமோ.2:8

3. பிரசங்கம் - அப்.20:7

4. கொடுத்தல் - (மனவிருப்பத்தின்படி) - 1கொரி.16:1-3

5. கர்த்தருடைய பந்தி - அப்.20:7

## IV எப்படி அங்கத்தினராக மாறுவது? (ஒரு கிறிஸ்தவன் மாத்திரமே) – அப்.11:26

1. சுவிசேஷத்தைக் கேள்விப்படுதல் - அப்.15:7

2. விசுவாசித்தல் - எபி.11:6

3. மனந்திரும்புதல் - லூக்.13:3

4. கிறிஸ்துவை அறிக்கையிடுதல் - மத்.10:13

5. ஞானஸ்நானம் பெறுதல் - மாற்.16:16

**V** இது வேதாகமம் எங்கு பேசுகிறதோ அங்கு பேசுகிறது

**VI** வேதாகமத்தில் உள்ள ஒரே சபை இதுவே

சபை உங்கள் ஒவ்வொருவரையும்
அன்புடன் அழைக்கிறது
தயவுசெய்து வாருங்கள்.



## பரிசுத்த வேதாகமம் என்னை
## பரிசுத்த தேவனுக்கு ஏற்றவனாக உருவாக்குகிறது

- ❒ பொய்நாவினால் பொருளைச் சம்பாதிப்பது
  சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம்போலிருக்கும் - நீதிமொழிகள் 21:6
- ❒ நீதியையும் தயையையும் பின்பற்றுகிறவன்
  ஜீவனையும் நீதியையும் மகிமையையும் கண்டடைவான் - நீதிமொழிகள் 21:21
- ❒ அநியாயத்தை விதைக்கிறவன் வருத்தத்தை அறுப்பான்;
  அவன் உக்கிரத்தின் மிலாறு ஒழியும் - நீதிமொழிகள் 22:8
- ❒ உன் மனதைப் பாவிகள்மேல் பொறாமைகொள்ள விடாதே;
  நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு - நீதிமொழிகள் 23:17
- ❒ நாளையத்தினத்தைக்குறித்துப் பெருமைபாராட்டாதே;
  ஒருநாள் பிறப்பிப்பதை அறியாயே - நீதிமொழிகள் 27:1
- ❒ வேதப்பிரமாணத்தை விட்டு விலகுகிறவர்கள் துன்மார்க்கரைப் புகழுகிறார்கள்;
  வேதப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவர்களோ
  அவர்களோடே போராடுகிறார்கள் - நீதிமொழிகள் 28:4



- ❒ உத்தமனாய் நடக்கிறவன் இரட்சிக்கப்படுவான்;
  மாறுபாடான இருவழியில் நடக்கிறவனோ
  அவற்றில் ஒன்றிலே விழுவான் - நீதிமொழிகள் 28:18
- ❒ மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும்;
  மனத்தாழ்மையுள்ளவனோ கனமடைவான் - நீதிமொழிகள் 29:23
- ❒ தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்;
  தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர் - நீதிமொழிகள் 30:5
- ❒ சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண்,
  கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள் - நீதிமொழிகள் 31:30

**கொரோனா கால சிந்தனைக்கு...**

- ◆ ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது;
  பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது - பிரசங்கி 1:4
- ◆ பிறக்க ஒரு காலமுண்டு, குணமாக்க ஒரு காலமுண்டு;
  நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு; - பிரசங்கி 3:2
- ◆ எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது; எல்லாம் மண்ணிலே உண்டாகிறது,
  எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது - பிரசங்கி 3:20
- ◆ பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப்பிரியன் செல்வப் பெருக்கினால்
  திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே - பிரசங்கி 5:10




- ◆ இந்நாட்களைப்பார்க்கிலும் முன்நாட்கள் நலமாயிருந்தது என்று சொல்லாதே;
  நீ இதைக்குறித்துக் கேட்பது ஞானமல்ல - பிரசங்கி 7:10
- ◆ ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க
  நீதிமான் பூமியிலில்லை - பிரசங்கி 7:20
- ◆ மாயை மாயை, எல்லாம் மாயை
  என்று பிரசங்கி சொல்லுகிறான் - பிரசங்கி 12:8
- ◆ காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர்
  கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே - பிரசங்கி 12:13

ப.ஏ

வேதாகம கதாபாத்திரங்கள்

Bible Characters

19




## பரிசுத்த வேதாகமத்தில் யோசேப்பு
## Joseph In The Holy Bible

1. யாக்கோபுக்கு ராகேல் பெற்ற இரண்டு குமாரரில் இவன் மூத்தவன் - ஆதி.30:24
2. யோசேப்பை யாக்கோபு தன் குமாரர் எல்லாரிலும் அதிகமாக நேசித்தான் - ஆதி.37:3
3. யோசேப்பின் சொப்பனம் - ஆதி.37:5
4. யோசேப்பை 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள் - ஆதி.37:28
5. பார்வோன் எகிப்திலே யோசேப்பை அதிகாரியாக்கினான் - ஆதி.41:41
6. தானியங்கொள்ள சென்ற பத்துப்பேர் - ஆதி.42:3
7. யாக்கோபின் ஆவி உயிர்த்தது யோசேப்பு உயிரோடிருக்கிறானா? - ஆதி.45:25
8. யோசேப்பின் வேண்டுகோள் என் எலும்புகளை கொண்டு செல்லுங்கள் - ஆதி.50:25
9. யோசேப்பு கனிதரும் செடி - ஆதி.49:22
10. 110 வயதில் யோசேப்பு மரித்தான் - ஆதி.50:26

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

***யோசேப்பின் எலும்புகளை எத்தனை வெள்ளிக்காசுக்கு கொண்ட இடத்தில் அடக்கம்பண்ணினார்கள்?***

**விடை:** 100 - "அவர்கள் சீகேமிலே யாக்கோபு சீகேமின் தகப்பனாகிய எமோரியருடைய புத்திரரின் கையில் நூறு வெள்ளிக்காசுக்குக் கொண்ட நிலத்தின் பங்கிலே அடக்கம்பண்ணினார்கள்; அந்த நிலம் யோசேப்பின் புத்திரருக்குச் சொந்தமாயிற்று " (யோசு.24:32)



பு.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

20



### பரிசுத்த வேதாகமத்தில் பெரும்பாடுள்ள ஸ்திரீ

### A Woman which was diseased with an issue of blood In The Holy Bible

1. கப்பர்நகூம் கடல் அருகே பெரும்பாடுள்ள ஸ்திரீ - மத்.9:20
2. இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டாள் - மாற்.9:27
3. தன் ஆஸ்திகளையெல்லாம் விற்றாள் - லூக்.8:43
4. இயேசுவின் வஸ்திரத்தை தொட்டவுடன் - மாற்.5:29
5. இயேசு தம்மிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்தார் - மாற்.5:30
6. இயேசு என் வஸ்திரங்களைத் தொட்டது யார் என்று கேட்டார் - மாற்.5:30
7. அந்த ஸ்திரீ நடுங்கிவந்து சொன்னாள் - லூக்.8:47
8. உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார் - மாற்.5:34
9. நீ சமாதானத்தோடேபோ - மாற்.5:34
10. உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார் - மாற்.5:34


**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

**இயேசு எந்த ஊருக்குப்போனபோது அவர் வீட்டிலிருக்கிறார் என்று ஜனங்கள் கேள்விப்பட்டு வந்தார்கள்?**

**விடை:** கப்பர்நகூம் - ..."சிலநாட்களுக்குப்பின்பு அவர் மறுபடியும் கப்பர்நகூமுக்குப் போனார்; அவர் வீட்டிலிருக்கிறாரென்று ஜனங்கள் கேள்விப்பட்டு; உடனே வாசலுக்கு முன்னும் நிற்க இடம்போதாதபடிக்கு அநேகர் கூடிவந்தார்கள்;" (மாற்.2:1)



# ஜெபியுங்கள்



- புதிதாக பள்ளியில் சேரும் குழந்தைகளுக்காக...
- அவர்களை பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்காக...
- பெற்றோர்களுக்காக...
- ஒவ்வொருவரும் கர்த்தராகிய இயேசுவை அறிந்துகொள்ள...
- தேவசித்தம் தொடர்ந்து பூமியிலே நடைபெற...
- புதிய ஊழியங்களை துவக்கியுள்ள ஊழியர்களுக்காக...
- உன்னதமான ஊழியங்கள் பாதுகாக்கப்பட...

**"கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே" – யாக்கோபு 5:8**

# நான் யார்?

# Who Am I?



- நான் நூனின் குமாரன்
- என்னுடைய மறுபெயர் ஓசேயா
- ஆயி பட்டணத்து தோல்விக்கு காரணமானவனை அப்புறப்படுத்தினேன்
- என் சொல்கேட்டு சந்திரனும் சூரியனும் நின்றது
- கில்கால் என்ற ஸ்தலம் உருவாக நான் காரணமானவன்
- நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்றேன்
- நான் 110 வருஷம் உயிரோடிருந்தேன்

‘ஒரே வழி’ தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50–ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**



பெண்கள் பகுதி

# எஸ்தர் – Esther

*-Glory Arjunan*

எஸ்தர் ஒரு மிகப்பெரிய பேரரசுக்கு ராணியாக இருந்த ஒரு யூதபெண்மணி. எஸ்தர் என்பது இவளுடைய பாரசீகப் (Persian Name) பெயர். இதன் பொருள் நட்சத்திரம். உண்மையில் இவள் ஒரு (Star) நட்சத்திரமாகவே இருந்தாள். இவளுடைய எபிரெய பெயர் அத்சாள். அத்சாள் என்றால் 'என்றும் பசுமை' என்று அர்த்தமாம். அதாவது 'மிர்ட்ல்' – Myrtle Tree இது சமாதானம், சந்தோஷம், அன்பு செழிப்பு, பெருந்தன்மை, நீதி போன்ற நற்குணங்களுக்கு அடையாளமாக இருக்கிறது. இக்குணங்களை அடையாளப்படுத்தும் எஸ்தர் என்னும் அத்சாள் நம்மெல்லாருக்கும் மாதிரியாக விளங்குகிறாள் என்றால் அது மிகையாகாது.

✦ எஸ்தர் ஒரு அனாதைப் பெண். தன் தாயையும் தகப்பனையும் இழந்தவளாக, ஒரு கைதியாக பெர்சியா நாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டாள். "...அவளுக்குத் தாய் தகப்பனில்லை; அந்தப் பெண் ரூபவதியும் சௌந்தரியமுடையவளாயிருந்தாள்; அவள் தகப்பனும் அவள் தாயும் மரணமடைந்த போது மொர்தெகாய் அவளைத் தன் குமாரத்தியாக எடுத்துக்கொண்டான்" (எஸ்.2:7) என்று வேதம் சொல்லுகிறது. இவ்வுலகில் அநேகர் தங்கள் தாய் தகப்பனை இழந்தவர்களாக, அனாதையாக இருக்கின்றனர். தாங்கள் அனாதை என்ற நினைப்பானது அவர்களை அனுதினமும் வாட்டி வதைக்கின்றதாகக் கூட இருக்கலாம். ஆனால் எல்லாரையும் உண்டாக்கின பரமபிதா ஒருவரையும் அனாதையாக விட்டுவிடுவதில்லை. ஒவ்வொரு தனிநபருக்கும் ஒரு பெரிய திட்டம் வைத்துள்ளார். ஆம், "என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்ளுவார்" (சங்.27) என்ற தாவீதின் சங்கீதத்தை ஒவ்வொருவரும் உரிமையாக்கிக் கொள்ளலாம். அவ்வாறே, எஸ்தர், தான் அனாதையாக இருந்த போதிலும் (எஸ்.2:8) மொர்தெகாயுக்குக் குமாரத்தியாக வளர்ந்தாள். தேவன் இவளைக் கொண்டு ஒரு பெரிய விடுதலையை யூதர்களுக்குக் கொடுக்கும்படி அற்புதமான திட்டம் வைத்திருந்தார்.

✦ எஸ்தர் ஒரு துணிச்சல்மிக்க பெண் எவ்வாறு அவள் துணிச்சல்மிகுந்தவளாய் இருந்தாள்? "இந்துதேசம் முதல் எத்தியோப்பிய தேசம் வரைக்குமுள்ள நூற்றிருபத்தேழு நாடுகளையும் அரசாண்ட அகாஸ்வேரு ராஜாவின் பட்டத்து ராஜாத்தியாக இருந்த எஸ்தர் தன் ஜனமாகிய யூதர் தப்புவிக்கப்படும்படிக்கு சட்டத்தை மீறி ராஜாவினிடத்தில் சென்று விண்ணப்பிக்கவும் மன்றாடவும் துணிந்தாள். "யாராவது அழைப்பிக்கப்படாமல், உள் முற்றத்தில் ராஜாவினிடத்தில் பிரவேசித்தால், புருஷரானாலும் ஸ்திரீயானாலும் சரி, அவர்கள் பிழைக்கும்படிக்கு அவர்களுக்கு ராஜா பொற்செங்கோலை நீட்டினாலொழிய

மற்றப்படி சாகவேண்டும் என்கிற ஒரு தவறாத சட்டமுண்டு, இது ராஜாவின் சகல ஊழியக்காரருக்கும், ராஜாவினுடைய நாடுகளிலுள்ள சகல ஜனங்களுக்கும் தெரியும்; நான் இந்த முப்பது நாளளவும் ராஜாவினிடத்தில் வரவழைப்பிக்கப்படவில்லை என்று சொல்லச் சொன்னாள்" (எஸ்.4:11). இருந்தபோதிலும், பிற்பாடு "...எஸ்தர் மொர்தெகாய்க்கு மறுபடியும் சொல்லச்சொன்னது: நீர்போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச் செய்து, மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம்பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம்பண்ணுவோம்; இவ்விதமாகச் சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச் சொன்னாள்" (எஸ்.5:15,16). அவள் முதலில் பயந்தபோதிலும் (எஸ்.4:11). பின்பு சரியானது எதுவோ அதைச் செய்தாள். யூதர்களை விடுவிக்கும்படி தன்னுடைய ஜீவனையும் பொருட்டெனக் கருதாமல் செத்தாலும் சாகிறேன் என்றாள். இது இவளுடைய துணிச்சலைக் காண்பிக்கிறது அல்லவா!

தேவன் உண்மையுள்ளவர். அவருடைய திட்டமும் தீர்மானமும் அற்புதமானவைகள். மொர்தெகாய் கூறுகையில் "...நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும், என்று சொல்லச் சொன்னான்" (எஸ்.4:14). ஆம், இவளுக்கு ராஜமேன்மை கிடைத்தது தேவனுடைய அநாதி தீட்டமல்லவா! கிறிஸ்துவை முழுமனதோடு ஏற்றுக் கொண்டு அவர் உபதேசத்தில் நிலைத்திருக்கிற நாமும் கூட நம்முடைய ஆவிக்குரிய வாழ்விற்கு ஆபத்து வருமானால் துணிச்சலாக செயல்பட வேண்டிய காலக்கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கிறிஸ்தவத்தையும் கிறிஸ்தவர்களையும் நசுக்க நினைப்பவர்களுக்கும் இதற்கு எதிராக சட்டங்களைத் தீட்ட நினைப்பவர்களுக்கும் முன்பாக நாம் எப்படி இருக்கப்போகிறோம்? எஸ்தர் தன்னுடைய ராஜமேன்மை தன்னை விட்டு எடுபடுமே என்று கவலை கொள்ளவில்லை. கிறிஸ்தவர்களாகிய நாமும் கூட தற்போது நமக்கு இருக்கிற பட்டம் பதவி, செல்வம் அனைத்துமே இல்லாமல் போனாலும் நம்மோடிருக்கும் கர்த்தர் உண்மையுள்ளவர் என்று எண்ணி அவருக்கு விரோதமான காரியங்களுக்கு அடிபணியாமல் எஸ்தரைப்போல செத்தாலும் சாகிறேன் என்ற துணிச்சலோடு இருப்போமா? கர்த்தர் தம்முடைய வார்த்தைகளின் மூலம் நமக்கு நம்பிக்கையளிக்கிறவராகவும், நாம் அனாதையைப் போல் காணப்பட்டாலும் நம்மைவிட்டு விலகாதவராகவும் இருக்கிறார். ஒன்றுக்கும் பயப்படாதவர்களாக, கலங்காதவர்களாக இருப்போம். மிகப்பெரிய பேரரசுக்கு (1:1) ராஜாத்தியாக இருந்தபோதிலும் ஒரு தகப்பனுக்குக் கீழ்ப்படிவது போல மொர்தெகாயின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து காரியத்தை கச்சிதமாக நடப்பித்தாள் (2:7,20). அவளுடைய அழகும், சௌந்தரியமும், ராஜமேன்மையும் அவளைப் பெருமையடையச் செய்ய முடியவில்லை. நாமும் இவளுடைய நல்மாதிரியை நமதாக்கிக்கொள்வோம்

✦ எஸ்தர் கர்த்தராகிய தேவனிடத்தில் விசுவாசம் நிறைந்தவளாக இருந்தாள் எஸ்தர் புத்தகத்தில் தேவன் என்ற சொல் எங்கும் பயன்படுத்தப்படவில்லை. இந்தப் புத்தகம் கி.மு. 465க்குப் பின் எழுப்பட்டதாகவும், எஸ்றா இப்புத்தகத்தை எழுதியிருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. இருந்தபோதலும் எஸ்தர் ஒரு யூதபெண்மணியாக இருந்தபடியால் கர்த்தரிடத்தில் நம்பிக்கையுள்ளவளாக இருந்தாள் ஆப்படியிருந்தபடியினால் தான், சூசானிலிருந்து எல்லா யூதர்களையும் திரட்டி, தன் ஜீவனைப் பணயம் வைத்து ராஜாவை நோக்கி மன்றாடும்படிக்குச் செல்லுமுன் உபவாசம்பண்ணும்படி கேட்டுக்கொண்டாள். அதன்பின்பு ராஜாவை விருந்துக்கு அழைத்தாள். "அப்பொழுது எஸ்தர்: ராஜாவுக்குச் சித்தமானால், நான் தமக்குச் செய்வித்த விருந்துக்கு ராஜாவும் ஆமானும் இன்றைக்கு வரவேண்டும் என்றாள்" (எஸ்.5:4). ராஜா எஸ்தரைப்பார்த்து: உன் வேண்டுதல் என்ன? அது உனக்குக் கொடுக்கப்படும், நீ கேட்கிறது என்ன? நீ ராஜ்யத்தில் பாதிமட்டும் கேட்டாலும் கிடைக்கும் என்றான். அதற்கு எஸ்தர் பிரதியுத்தரமாக; ராஜாவின் கண்களில் எனக்குக் கிருபைகிடைத்தது, என் வேண்டுதலைக் கட்டளையிடவும், என் விண்ணப்பத்தின்படி செய்யவும், ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால், ராஜாவும் ஆமானும் நான் இன்னும் தங்களுக்குச் செய்யப்போகிற விருந்துக்கு வரவேண்டும் என்பதே என் வேண்டுதலும் என் விண்ணப்பமுமாயிருக்கிறது; நாளைக்கு ராஜாவின் சொற்படி செய்வேன் என்றாள்" (எஸ்.5:6–8). எத்தனை பொறுமையான பதில் எப்பேர்ப்பட்ட ஞானம் இவளுக்கு! கர்த்தருக்குப் பயந்து ஒரு காரியத்தை நடப்பிக்கும் போது, கர்த்தர் நமக்கு ஞானத்தைத் தருகிறவராகயிருக்கிறார். "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" (நீதி.1:7) என வேதம் கூறுகிறது. பொறுமையோடும், ஞானத்தோடும் ராஜாவினிடத்தில் விண்ணப்பித்து வெற்றி கொண்டாள் எஸ்தர். யூதரை விடுவித்தாள். இப்படியாக அகாஸ்வேருவின் ராஜ்யத்திலுள்ள நூற்றிருபத்தேழு நாடுகளில் இருக்கிற எல்லா யூதருக்கும் சமாதானமும் விடுதலையும் கிடைத்தது.

அன்பான சகோதரிகளே, இந்த எஸ்தர் மரித்து, பலநூற்றாண்டுகள் கடந்தபோதிலும், அவளுடைய துணிச்சல், தேவனிடத்தில் அவள் கொண்டிருந்த விசுவாசம், தன் ஜனங்களுக்காக தன் உயிரையே பணயம் வைத்து செயல்பட்டு யூதர்களுக்கு விடுதலையையும், சமாதானத்தையும் பெற்றுத்தந்த அவளுடைய செயல் நமக்கெல்லாம் சிறந்த மாதிரி அல்லவா? நாமும் உலகமெங்கிலுமுள்ள விசுவாச குடும்பங்களுக்காக ஜெபிப்போம். இந்த உலகத்தில் கர்த்தருடைய பிள்ளைகளாக வாழுகிற அவர்களுக்கு விரேதமாக எழும்புகிற அதிகாரங்களிலிருந்து அவர்களை நம்முடைய பிதாவாகிய தேவன் விடுவித்து காக்கவும், அவர்கள் யாவரும் அவரால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த உலகத்தில் சமாதானமாகவும், சுதந்திரமாக செயல்படவும் ஒவ்வொரு நாளும் ஜெபிப்போம். கர்த்தர் நம்மோடிருநது வழிநடத்துவராகா! ஆமென்.

## உலகத்தின் "வேடிக்கை"யான காரியங்களை நான் அநுபவிக்க விரும்புகிறேன்

பெண்கள் பகுதி

## I Want To Enjoy 'Fun' Things of The World

*-Betty*



ஒரு கட்டுப்பாடான வாழ்வை தெரிந்துகொண்ட, மற்றும் தம் நண்பர்கள் மீது அன்பு காட்டுகிற கிறிஸ்தவர்களை பார்க்கின்ற அநேகர், இதற்கு எதிரிடையான ஒரு உலகப்பிரகாரமான இன்ப வாழ்வோடு இசைந்தவர்களாய் **அவர்கள் குறைந்தபட்சம் தங்களுடைய இளமைப் பருவத்திலாவது உலகப்பிரகாரமான காரியங்களை அநுபவிக்கவேண்டுமெனத் தீர்மானிக்கின்றனர்.** தங்களுடைய நினைவுகளில், கிறிஸ்தவர்கள் சுய–வெறுப்பு மற்றும் சிலுவை–சுமத்தல் போன்ற வேதனை நிறைந்த காரியங்களில் வாய்விட்டு சிரிப்பதற்கும் கட்டுபாடுள்ள ஒரு வாழ்வு வாழவேண்டியவர்களாக இருக்கின்றனர் என எண்ணுகின்றனர். ஆனால் எந்த ஒரு மதியீனனும் தாமாகவே உலகத்தின் எல்லா "நன்மை"யான காரியங்களை இழக்க விரும்புவானா?

**உலகம் கொடுக்கிறதான இன்பங்கள் எவையெவை?**

✦ **உலக இன்பம்.** ஒரு நபர் குடி, போதை, புகைபிடித்தல், சூதாடுதல், ஒழுக்கங்கெட்டசெயல், ஆபாசமான பாஷை, வெறுப்பு, மற்றும் சோதனைக்குரிய மற்ற நடத்தை போன்ற எந்த செயலையும் அனுமதிக்க விரும்புகிற இவைகளில் உலக இன்பத்திற்கு சுதந்திரம் உண்டு.

✦ **தவிர்ப்பதிலிருந்து சுதந்திரம்:** தவிர்ப்பதிலிருந்து சுதந்திரம் என்பது "விதிகளை" மீறும் ஒரு செயலாகும் அவன்/அவள் தன் இச்சைக்கேற்ப உடுத்திக்கொள்வது, தான் விரும்புகிற இடத்திற்குச் செல்வது, தான் தெரிந்தெடுக்கிற வாழ்க்கை முறையினை பின்பற்றுவது, மற்றவர்களுக்காக பொறுப்புள்ள தியாகம் செய்வதை தவிர்ப்பது ஆகும். இப்படிப்பட்ட சுதந்திரத்துடன், அங்கே பரஸ்பர உதவி, நீதி நெறி. ஒழுக்கம் அல்லது சமயக்கட்டுப்பாடுகள் போன்றவைகள் இல்லை. அங்கே இப்படிப்பட்ட காரியங்கள் 'பாவம்'போலவும், இதைச் செய்ய வேண்டும் அல்லது இதைச் செய்யக்கூடாது போன்ற மனசாட்சிக்குரிய அறிவுறுத்தல் போலவும் தோற்றமளிப்பதில்லை.

✦ **ஒரு நபருடைய சுய–நலங்களின் உயர்வு:** ஒரு நபருடைய சுய–நலங்களின் உயர்வு என்பது பொய், ஏமாற்று, அல்லது களவு போன்றவைகள். ஒருவர் பெற விரும்புகிறவற்றைக் கொண்டுவருமானால் இவைகளை அவன் செய்ய முடியும்; ஒருவனுடைய சுய சரீரத்தின்மேல் முழு அதிகாரம் செலுத்த கருச்சிதைவு அனுமதிக்கிறது, தீராத கொடிய வியாதியஸ்தரை மரிக்கவைத்தல் ஒருவனை தேவையிலுள்ளளோர் அல்லது உதவியற்றோர் மேலுள்ள பொறுப்புகளின் அதிகாரத்திலிருந்து விடுவிக்கிறது; உறவுகளில் வாழ்வது தனிப்பட்ட சுதந்திரத்தையும் அனுமதிக்கிறது. ஒவ்வொரு தெரிந்தெடுத்தல் மற்றும் ஒவ்வொரு தீர்மானத்திற்கும் எனக்கு எதுவெல்லாம் சரியோ அது 'சரி'என்பதே அடிப்படை "தத்துவம்" என்பதாகயிருக்கிறது.

**ஆனால் இவ்வுலக இன்பங்கள் என்னென்ன விளைவுகளைக் கொடுக்கிறது?**

✦ ஒரு நபர் அனைத்து உலக இன்பங்களுக்குக்கான கதவுகளை மனதார திறக்கிற பொழுது, சாத்தான் ஒரு உணர்ச்சி மிகுந்த நல்ல காலத்தை வாக்குப்பண்ணுகிறான். ஆனால் உலக இன்பங்களிலிருந்து வரும் விளைவுகள் என்ன? யார் மதுவிருந்திலிருந்தும், ஆல்கஹாலுடன் தன் உடல்நலத்தை அழிக்கிறதிலிருந்தும் விடுவித்துக்கொள்ள எச்சரிக்கையாயிருக்கிறார்? யார் ஆல்கஹாலிலும் மற்ற துர்ப்பழக்க வழக்கங்களினாலும் தன் குடும்ப போஜனத்தையும், வீட்டையும், துணிமணிகளையும் வீணாக்குகிறார்? யார் ஒருவித குடிபோதைமயக்கத்திலிருக்கும் போது தன் மனைவியையும் குழந்தைகளையும் அடிக்கிறான்?

யார் அளவுக்கு மிஞ்சிய மயக்கமருந்தினால் மரிக்கிறான்? எவள் அதிகமான போதை மருந்து மயக்கத்தினால் உலகத்தின் அசுத்தத்தில் வசிக்கிறபோது தன் குழந்தைகளை வீட்டில் தனியாக விட்டுவிட்டுச் செல்லுகிறாள் யார்? தன்னுடைய தாயின் உலகஇன்பமான போதைபழக்கத்தினால் யாருடைய குழந்தைகள் போதைப்பழக்கத்திற்கு அடிமையாக அல்லது கொடூரமான அங்கயீனமாக மற்றும் மூளை வளர்ச்சி குறைவாக பிறந்துள்ளனர்?

யார் பல வருடங்களாக புகைப்பிடித்தபின் மூச்சுவிடமுடியாதபடி நுரையீரல் நோயினால் அவதிப்படுகின்றனர்? யார் உணர்ச்சிமிக்க, நிதிசம்பந்தபட்ட, உதவியற்று மரிக்கிறவர்களாக, மருத்துவத்திற்காக எண்ணற்ற கிரயம் செலுத்தியும் ஒரு போதும் குணமாக்கமுடியாத நோயினாலும் அவதிபடுகிறான்?

யார் தான் கொண்டிருந்த அனைத்தையும் சூதாடி தொலைத்து தன்னுடைய வாழ்க்கை சாப்பாட்டிற்கும் வழியில்லாமல் போனதினால் தற்கொலை செய்கிறான்? மற்றவர்கள்போல் வெறுப்பு மற்றும் மனகசப்பு நிறைந்த இருதயத்தைக் கொண்டிருப்பதினால் உயர் இரத்த அழுத்தமும் சரீரப் பிரச்சனைகளையும் யார் அதிகரிக்கிறான்? யார் சகிப்புத்தன்மையற்ற மனநிலைகொண்டிருப்பதினால், குடும்பத்திற்காக, நேசிக்கப்பட்டவர்களுக்காக, நண்பர்களுக்காக, கூட்டாளி களுக்காக வாழ்க்கையை நாசமாக்குகிறான்?

✦ ஒரு மனிதன் மனதில் எல்லா வேலிகளையும் நீக்குகிற பொழுது, மறுபடியும் சாத்தான் ஒரு மிகநல்ல காலத்தை வாக்குப்பண்ணுகிறான். ஆனால் ஒருவன் தான் விரும்புகிறதையெல்லாம் செய்கிறபோது, என்ன நடக்கிறது? அவன் 'விதிகளை மீறுவதில்' சந்தோஷமடையலாம், மேலும் அவன் தெரிந்து கொள்ளுகிறதை யெல்லாம் செய்வதில் சுதந்திரவாளியாக இருக்கின்றோம் என நினைக்கலாம், ஆனால் அவன் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவனாக மாறுகிறான். எல்லா விதிகளும் சிறந்த வாழ்க்கை, குறைந்த எதிர்ப்புதன்மை மற்றும் மனிதனுக்கிடையே குறைவான பிரச்சனைகளை உருவாக்கவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒருவன் விதிகளை புறம்பாக்கும்போது, பொதுவாக சமுதாயத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப்பிலிருந்து அவன் தாமே புறம்பாக்கப்படுகிறான்.

✦ ஒரு மனிதன் எதையும் செய்ய ஆயத்தமாக இருக்கும் பொழுது, மறுபடியும் சாத்தான் ஒரு மிகப்பெரிய நல்ல காலத்தை வாக்குப்பண்ணுகிறான். ஆனால் ஒரு மனிதன் தன் சுய– நலனுக்காக ஒவ்வொன்றையும் ஒவ்வொருவரையும் இழக்கப் பண்ணுகிறபோது என்ன நடக்கிறது? பொய், ஏமாற்று, களவு போன்றவைகள் அம்பலப்படுத்தப்படும்போது, யார் ஒவ்வொன்றையும் இழக்கிறான்? பாலியல் தொற்று வியாதிகள் மூலம், எய்ட்ஸ் வியாதியின் மூலம், கருச்சிதைவினால் உணர்ச்சிமிக்க சரீரத் தழும்புகள் மூலம்,யாருடைய சரீரம் அழிந்து போகும்?

உதவியற்றவனாக, முதியோனாக குறைபாடுள்ளவனாக, ஒருவன் "மாய்த்துக்கொள்ள"–கொன்றுவிட– ஆயத்தமாயிருந்தால், அவன் உதவியற்றவனாகவும், வயதானவனாகவும், குறைபாடுள்ள வனா கவுமிருக்கும் போது அவனுக்கு என்ன நேரிடும்? ஒருவனுடைய நியாயங்கள் மற்றவர்களுடைய நியாயங்களால் நசுக்கப்படும் பொழுது, அவர்கள் குற்றவாளிகளாக மாறுகின்றனர்.

தேவனுடைய ஞானத்தில், நீண்டகாலத்திற்கு முன்பாக அவர் தம்முடைய வார்த்தையில், "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"(ரோம.6:23) என எச்சரித்தார். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவோமானால், அவர் ஏற்படுத்தின இந்தக்கட்டளை பார்ப்பதற்கு ஒரு நியாயமற்ற கொடுங்கோன்மையான 'கட்டளை' அல்ல. இது ஒரு உண்மையான கூற்று. பாவம் தவிர்க்க முடியாத விளைவுகளைக் கொண்டுவரும்.

திரும்பச் சென்று உங்களுடைய தீர்மானத்தை மறு ஆய்வு செய்யுங்கள். சாத்தானுடைய தந்திரமான பொய்களை நம்பி உங்களை அழித்துக் கொள்ளாதீர்கள்.

## புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து



| | | | |
|---|---|---|---|
| மத்தேயு | புத்தகத்தில் | கிறிஸ்து | நம் மேசியா |
| மாற்கு | புத்தகத்தில் | அவர் | நம் ராஜா |
| லூக்கா | புத்தகத்தில் | அவர் | நம் மருத்துவர் |
| யோவான் | புத்தகத்தில் | அவர் | தேவனுடைய குமாரன் |
| அப்போஸ்தலர் | புத்தகத்தில் | அவர் | உயிர்த்தெழுந்த ஆண்டவர் |
| ரோமர் | புத்தகத்தில் | அவர் | நம் நீதிபரர் |
| கொரிந்தியர் | புத்தகத்தில் | அவர் | நம் பரிசுத்தர் |
| கலாத்தியர் | புத்தகத்தில் | அவர் | நம் நியாயாதிபதி |
| எபேசியர் | புத்தகத்தில் | அவர் | நம் பரிபூரணர் |
| பிலிப்பியர் | புத்தகத்தில் | அவர் | நிறைவாக்குபவர் |
| கொலோசெயர் | புத்தகத்தில் | அவர் | நம் நம்பிக்கை |
| தெசலோனிக்கேயர் | புத்தகத்தில் | அவர் | வரவிருக்கும் ராஜா |
| தீமோத்தேயு | புத்தகத்தில் | அவர் | நம் மேய்ப்பர் |
| தீத்து | புத்தகத்தில் | அவர் | நம் பலன் |
| பிலேமோன் | புத்தகத்தில் | அவர் | உற்சாகமளிப்பவர் |
| எபிரெயர் | புத்தகத்தில் | அவர் | நம் பிரதான ஆசாரியர் |
| யாக்கோபு | புத்தகத்தில் | அவர் | நம் ஞானம் |
| பேதுரு | புத்தகத்தில் | அவர் | நம் சுதந்தரம் |
| யூதா | புத்தகத்தில் | அவர் | வழுவாதபடி காப்பவர் |

# உன் தேவனை சந்திக்க ஆயத்தப்படு

## Prepare To Meet your God

*D.David*



**யா**ரைப் பார்த்து இந்த கேள்வியைக் கேட்க முடியும்! ஆயத்தமில்லாதவர்களைப் பார்த்து ஆமோஸ் என்ற தீர்க்கதரிசி கேட்டான் "... உன் தேவனை சந்திக்க ஆயத்தப்படு. அவர் பர்வதங்களை உருவாக்கினவரும், காற்றைச் சிருஷ்டித்தவரும், மனுஷனுடைய நினைவுகள் இன்னதென்று அவனுக்கு வெளிப்படுத்துகிறவரும், விடியற்காலத்தை அந்தகாரமாக்குகிறவரும், பூமியினுடைய உயர்ந்த ஸ்தானங்களின்மேல் உலாவுகிறவருமாயிருக்கிறார்; சேனைகளின் தேவனாகிய கர்த்தர் என்பது அவருடைய நாமம்" (ஆமோஸ் 4:12,13).

இப்பிரதியை வாசிக்கிற நீங்கள் அவரை சந்திக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா? அன்று இஸ்ரவேலை சந்தித்தார். இன்று நம்மை சந்திக்க ஆண்டவர் இயேசு மீண்டும் வரப்போகிறார். அவர் பரிசுத்த முள்ளவர், பாவத்திற்கு விலகினவர், நம்மை நித்திய வாழ்க்கைக்கு அழைத்துச் செல்ல வரப்போகிறார். அவரை சந்திக்க நாம் பாவ வாழ்க்கையை விட்டு மனந்திரும்பி, அவருடைய வசனத்தின்படியாக உங்களுடைய வாழ்க்கையை மாற்றி அமைத்துக்கொண்டு அவர் ஏற்படுத்தியிருக்கிறதான புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை அறிந்துகொள்ளுங்கள்.

லூக்கா 12:16-20 வசனங்களில் ஒரு ஐசுவரியவான் தனக்காகவே வாழ்ந்துகொண்டிருந்தான். அவன் தன் ஆத்துமாவை நோக்கி; உனக்காகவே அநேக வருஷங்களுக்கு அநேக பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்று கேட்டார்.

இன்றைக்கு அநேகர் இப்படித்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்த பூமியிலே நிரந்தரமாக வாழ்வதைப்போல எண்ணி தங்களுடைய ஆஸ்திகளை அதிகப்படுத்துகிறார்கள். வேதம் அப்படிப்பட்டவர்களைப் பார்த்து மதிகேடன் என்று சொல்லுகிறது.

எபிரெயர் 12:14ம் வசனம் சொல்லுகிறது. "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" என்று. ஆண்டவராகிய இயேசுவைப்போல நீங்கள் மாறாவிட்டால் அவரை ஒருபோதும் தரிசிக்க முடியாது. ஏனென்றால் அவர் பரிசுத்தமுள்ளவராயிருக்கிறார். நீங்களும் பரிசுத்தமுள்ளவர்களாக மாறுங்கள். நாங்கள் உங்களுக்காக உங்களுடைய குடும்பங்களுக்காக ஜெபிக்கிறோம்.

சிறுவர் பகுதி

# இரண்டாவது முறையாக விற்கப்பட்டவன்

வேத பகுதி: ஆதியாகமம் 37:1-39:5



**யோ**சேப்பு தன் சகோதரர்களாலே மீதியானியரிடத்தில் 20 வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டான். அவர்கள் அவனை எகிப்திற்குக் கொண்டு போனார்கள். அவனுக்குத்தான் எவ்வளவு மனக்கஷ்டம் இருந்திருக்கும். தன் குடும்பம், இடம், நண்பர்கள், உறவினர்கள் எல்லாவற்றையும் இழந்தவனாக மீதியானியரின் கையில் ஒரு கைப்பொம்மையாக அவர்களோடு இருந்தான். அவனுக்கு துன்மார்க்கமான செயல் பிடிக்காது. ஆகையால் 17 வயதிலே தன் சகோதரருடனே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும் போது தன் சகோதரர்களுடைய துன்மார்க்கத்தை தன் தகப்பனுக்குச் சொல்லிவருவான். அவன் தகப்பனாகிய யாக்கோபோ முதிர் வயதிலே யோசேப்பு தனக்குப் பிறந்ததினால் தன் பிள்ளைகள் எல்லாரிலும் யோசேப்பை அதிகமாய் நேசித்து அவனுக்குப் பலவருணமான அங்கிகளை செய்து உடுத்துவான். இதையெல்லாம் கண்ட அவன் சகோதரர்கள் அவன்மீது பொறாமை கொண்டு அவனை தூக்கி விற்றுப்போட்டார்கள்.

தங்களுடைய தவறை மறைக்க ஒரு வெள்ளாட்டு கடாவை அடித்து, யோசேப்பின் அங்கியை இரத்தத்தில் தோய்த்து தங்களுடைய தகப்பனிடத்துக்கு அனுப்பி இதை நாங்கள் கண்டெடுத்தோம், இது உம்முடைய குமாரன் அங்கியோ அல்லவோ பாரும் என்று சொல்லச்சொன்னார்கள். யாக்கோபு அதைக் கண்டு, இது என் குமாரனுடைய அங்கிதான், ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்துப்போட்டது, என்று புலம்பினான். அந்த மீதியானியரோ யோசேப்பை எகிப்திலே பார்வோனின் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்பவனிடத்தில் விற்றார்கள். முதலாவது தன் சகோதரர்கள் அவனை 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். பின்பு அந்த மீதியானியர் போத்திபாருக்கு விற்றுப்போட்டார்கள். இதை கண்ட யோசேப்பு எப்படி மனங்கசந்து அழுதிருப்பான் என்பதை சற்று தியானித்துப்பாருங்கள். கர்த்தர் அவனோடு இருந்தபடியால் அவன் எகிப்து தேசத்திலே உயர்த்தப்பட்டான்.

அப்படியே உங்களோடும் கர்த்தர் இருக்க நீங்கள் விரும்பினால் இந்த யோசேப்பைப் போல துன்மார்க்கத்துக்கு விலகி நலமான காரியத்தைச் செய்யுங்கள். கர்த்தர் யோசேப்பினிமித்தம் அந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்; வீட்டிலும், வெளியிலும், அவனுக்கு உண்டானவைகள் எல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருந்தது. உங்கள் நிமித்தம் உங்களுடைய தேசம், உங்களுடைய வீடு ஆசீர்வதிக்கப்பட யோசேப்பைப் போல மாறுங்கள்.

**மனப்பாட வசனம்**

“வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்?
உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால் தானே” - சங்.119:9

## வேத அறிவுப் போட்டி எண்: 274

போட்டியாளர்கள் கவனத்திற்கு,


கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. மெய்யாகவே அவர் ஜனங்களைச் சிநேகிக்கிறார். அவருடைய பரிசுத்தவான்கள் எல்லாரும் உம்முடைய கையில் இருக்கிறார்கள் என்றவன் யார்?
2. ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி நம்மேல் எவ்விதமான பொறுமையுள்ளவராயிருக்கிறார்?
3. இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலேயிருந்து கொண்டுவந்த யோசேப்பின் எலும்புகளை எத்தனை வெள்ளிக்காசுக்குக் கொண்ட நிலத்தின் பங்கிலே அடக்கம்பண்ணினார்கள்?
4. நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால் நாம் எவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம்?
5. கர்த்தருடைய தூதனானவர் பலிபீடத்தின் ஜீவாலையிலே ஏறிப்போனார் அதை கண்டு, தரையிலே முகங்குப்புற விழுந்த கணவன் மனைவி யார்?
6. எப்புஸ்தகம் என் வாய்க்கு அது தேனைப்போல மதுரமாயிருந்தது நான் அதைப் புசித்தவுடனே என் வயிறு கசப்பாயிற்று?
7. எந்த ராஜா பரிசத்தை விரும்பாமல், பெலிஸ்தரின் நூறு நுனித்தோல்களைக் கேட்டான்?
8. நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே எதைப்போலப் பிரகாசிப்பார்கள்?
9. எபூசியர்மேல் யுத்தம்பண்ண தாவீது செல்லும்போது அவனை எவர்கள் தடுப்பார்கள் என்று சொன்னார்கள்?
10. தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே என்றவர் யார்?

## வேதாகம ஆய்வு... 58

### சாராள்
### Sarah

1. தேவன் வைத்தபெயர் – ஆதி.17:15
2. சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி கீழ்ப்படிந்திருந்தாள் – 1பேது.3:6
3. சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள் அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக என்று சொல்லப்பட்டது – ஆதி.17:19
4. கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்குச் செய்தருளினார் – ஆதி.21:1
5. சாராள் 127 வருஷம் உயிரோடிருந்தாள் – ஆதி.23:1



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.

June 2023



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழின் மூலம் ஆந்திராவில் ஆண்டவரின் பணி துவக்கம் ஏப்ரல் 15ம் தேதி 2023

சகோதரிகள் கூட்டம்





Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

எமது புதிய வெளியீடு
இன்றே வாங்கி
பயன்பெறுங்கள்



To

Postman Remarks (If Undelivered):

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA




Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan